அனார்

# ஓவியம் வரையாத தூரிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
நகர சபை — கம்பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REFERENCE

# ஓவியம் வரையாத தூரிகை

(கவிதைத் தொகுப்பு)

CLASS
NO:

அனார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R 16536

# OVIEM VARAIYATHE THURIKAI

**ANAR** ©

ACCESSION NO: 16536
CLASS NO: 894.8111

Subject : **Poetry**

First Edition : **January 31, 2004**

Publisher : **" Moontravathu Manithan "**
143, Muhandaram Road,
Colombo - 03
Sri Lanka.

Book Layout :
Computer Layout :
Computer Type Set :
Laser Print :
} **A. Mohamed Azeem**

Author : **ANAR** [ Issath Rehana Azeem ],
542B, Gaffoor Road,
Sainthamaruthu. 16 ( 32280),
Sri Lanka,
E-Mail : azreha@yahoo.com

Price : **Rs. 100.00**

பொருள் : கவிதை

முதற் பதிப்பு : ஜனவரி 31, 2004

வெளியீடு : " மூன்றாவது மனிதன் "

ஆசிரியர் : அனார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அஸீமிற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி:-

- மூன்றாவது மனிதன்
- எக்சில்
- அமுது
- ஊடறு
- பெண்கள் சந்திப்பு மலர்
- விபவி
- தினகரன்
- நிலம்
- யாத்ரா
- பெண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே ...


| | | |
|---|---|---|
| தேய் பிறை | - | 01 |
| சூரியனைப் பற்றவைக்க | - | 03 |
| ஓவியம் | - | 05 |
| ஈரம் சொட்டும் காதல் | - | 06 |
| ஓட்டுண்ணி | - | 08 |
| காயமே மருந்தாகி | - | 10 |
| மௌனச் சிலுவைகள் | - | 11 |
| துஷ்பிரயோகம் | - | 12 |
| பேசாதிருப்பதனால் | - | 13 |
| யாருக்கும் கேட்பதேயில்லை | - | 15 |
| வன்மப்படுதல் | - | 16 |
| தாமரைக் குளத்துக் காதலி | - | 18 |
| மேகமும் வானமும் | - | 20 |
| ம(ர)ணப் பந்தல் | - | 22 |
| ஓவியம் வரையாத தூரிகை | - | 24 |
| வஞ்சனை | - | 26 |
| இலையுதிர்க்கும் பாட்டு | - | 28 |
| தவறிய தடங்கள் | - | 30 |
| சிசு வதை | - | 32 |
| ஊமைக் காவியம் | - | 33 |
| மலட்டுச் சித்திரங்கள் | - | 34 |
| காயங்கள் | - | 35 |
| சிலை செதுக்கிய சிற்பம் | - | 37 |
| கோரிக்கை | - | 39 |
| ஓவியச் சிலந்திக் கூடு | - | 41 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஓவியம் வரையாத தூரிகை': ஒரு குறிப்பு

நம்மிடையே குறிப்பிட்ட இனங்களின், மொழிகளின், தேசங்களின், பிரதேசங்களின் மீதான ஒடுக்கல்கள் ஏதோவொரு வழியில் இன்னமும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இவை அனைத்திற்கும் உள்ள முக்கிய பொது அம்சங்களில் ஒன்றாக பால்ரீதியான ஒடுக்கல் அமைகிறது. பெண் என்ற ஒரே காரணத்துக்காக தெரிவுகள் மறுக்கப்படுவதும், எல்லைகள் குறுக்கப்படுவதும், உழைப்பு குறைத்து மதிக்கப்படுவதும், சமூகக் கண்ணோட்டத்தில் அந்தஸ்து குறைக்கப்பட்டு நோக்கப்படுவதும் நமக்கு புதிய சமாச்சாரமில்லை. எம்மில் சில பெண்களும், ஆண்களும் இவ் ஒடுக்கலை பிரக்ஞைபூர்வமாக உணர்ந்து அதை எதிர்கொள்ளும் வழிகளில் ஈடுபட்டு பெண்களின் எல்லைகளை, தெரிவுகளை ஓரளவு அகலித்திருக்கிறார்கள். சிலர் ஒடுக்கலை உணர்ந்தும் 'விதி' என்று வாழ்நாட்களை கடத்தி வருகிறார்கள். ஆனால் பால்ரீதியான ஒடுக்கலை அறியாமல் அல்லது ஏதோ வழியில் உணராமல் எம்மில் எவரும் இல்லை என்றே கூறவேண்டும்.

இந்த பிரக்ஞை உணர்வே பெண்ணாகிய எமது பாத்திரமானது பல புதிய பரிமாணங்களுடன் நோக்கப்படுவதற்கான சாத்தியங்களைக் கொண்டுள்ளதுடன், எமது எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை மேலும் வலுப்படுத்துகிறது.

நவீன தமிழ்ப்பெண் கவிஞர்களைப் பொறுத்தவரையில் 1986ல் ஈழத்திலிருந்து வெளிவந்த 'சொல்லாத சேதிகள்' முதல் மைல்கல்லாக அமைகிறது. அதன் பின் இன்றுவரை பல தனித்த கவிதைத் தொகுதிகளும், பல பெண்கவிஞர்களை ஒரு சேரத் தொகுத்த தொகுப்புகளும் வெளிவந்துள்ளன / வெளிவந்து கொண்டிருக்கின்றன. இதுவரை வெளிவந்த இவை அனைத்தின் தொடர்ச்சியாகவும் எம் பயணத்தின் நீட்சியாகவும் அனாரின் 'ஓவியம் வரையாத தூரிகை' கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனாரின் 'ஓவியம் வரையாத தூரிகை' கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

'ஓவியம் வரையாத தூரிகை'யில் பெண்ணின் ஆத்மார்த்தமான குரலினை பல்வேறு வடிவங்களில் கேட்க முடிகிறது. இக்குரல் விளிம்பு நிலை வாழ்வை பல வழிகளில் பதிவு செய்கிறது. அதாவது பெண் என்ற வகையில் இப்பதிவு பால்ரீதியானதாகவும், கிழக்கிலங்கையைச் சேர்ந்த ஒரு முஸ்லீம் தமிழ்ப்பெண் என்ற வகையில் பிரதேச, மத, இன, மொழிரீதியானதாகவும் அமைகிறது. இதைவிட பெண்ணின் வெவ்வேறு வயதுப் பருவங்கள் இக் குரலினோடு தெரிவதோடு, பலவகை உணர்வுகளின் கலவை "தழும்பிச் சிந்துகிற" தையும் மிக அந்நியோன்யமாக உணரக் கூடியதாக உள்ளது.

"எனை ஒத்தவர்கள்
குளிரோடையில் படகுவிட்டுக்
குதூகலிக்கிறார்கள்" எனும் போது

சின்னஞ்சிறு சிறுமி ஒருத்தியின் வெளியில் ஆடும் விளையாட்டுக்கான தீராத ஏக்கத்தையும் ஆசையையும், சிறுபிராயத்துக் குதூகலங்களில் ஒன்றான வெளிவிளையாட்டு அவளுக்கு மறுக்கப்பட்டிருப்பதையும் எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

பால்யம் முதற்கொண்டு இவ்வாறு ஏற்பட்ட வேதனையான அனுபவங்கள் பலவற்றால் அவள்

"கிழிந்த ஆசைகளையும்
கீறல் விழுந்த காயங்களையும்
சுமந்து" திரிபவளாகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ் வலிகளே 'தேய்பிறை', 'யாருக்கும் கேட்பதேயில்லை' போன்ற கவிதைகளில்

"வனாந்தரத்து
விருட்ச மொன்றில்
வீரிட்டுப் பாடும்
தனித்த பறவையின்
பாட்டினில் கசியும்" இசையாகவும்

"துளைகள் அடைபட்ட
புல்லாங்குழலினுள்
செத்துக் கொண்டிருக்கிற" கீதமாயும் மாறி மாறி ஒலிக்கின்றன.

ஆனால் அவ்வுணர்வுகள் ஏற்படுத்தும் தனிமை, சோகம், ஏக்கம், இழப்பு நிராசைகளுள் உழன்று மூழ்கி இழைக்கப்படும் அநீதிகளுக்கும், மறுக்கப்படும் அடிப்படைத் தெரிவுகளுக்குமாய் தன்னை இழந்து விட அவள் தயாராய் இல்லை என்பதை

"நீ - சொல்வதுதான் வேதம்
நீ - காட்டுவதுதான் உலகமெனில்
எனக்கென்று
இதயமும் கண்களும் எதற்கு" என்ற உயிர்ப்பான கேள்வி மூலமும்

"மன்னிக்க
உனது பணிப்பின் பேரில்
நான் பிறக்கவில்லை" என்ற கூற்று மூலமும் தெளிவாக முன் வைக்கிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘வஞ்சனை’ என்ற கவிதை ஈழத்து முஸ்லீம் தமிழரின் மேல் கட்டவிழ்த்து விடப்படும் தமிழ்ப் பேரினவாத வன்முறையையும், அதன் மூலம் அவர்களுக்கு இன்றுவரை இழைக்கப்பட்டு வருகின்ற வஞ்சிப்பையும் அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது.

ஈழத்து தமிழ் அரசியலில் 1990களில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பான வரலாற்றுப் பின்னணியை புலமாக்கிப் பார்க்கும் போதுதான் இக்கவிதையின் வெவ்வேறு தளப்பரிமாணங்களை புரிந்து கொள்ளமுடியும்.

“எம்மிடமிருந்த
எல்லாமே உமக்கு
இடைஞ்சலாய் தோன்றிற்று” எனும் போதும்

கடைசியில்
“நீர் - இத்தேசத்தின்
சௌபாக்கிய மனிதராய் இருக்க
நாம் -
நாடற்று
நாதியற்று!” என்று

அக்கவிதை முடியும் போதும் மனிதாபிமானம் கொண்ட நம் ஒவ்வொருவருக்குள்ளும் ஏற்படும் குற்றவுணர்ச்சியும் வெட்கமும் எம் தலைகளைக் குனியவைப்பது தவிர்க்கமுடியாத நிகழ்வாகிறது.

இக் கவிதைகளின் குரல் சிலசமயங்களில் மூன்றாம் உலக பெண்களுக்கான பொதுக்குரலாகவும், ஈழத்து சமகால அரசியல் பிரச்சனைகளை அணுகும்போது தமிழ்ப்பேரினவாதத்திற்கு எதிரான குரலாகவும் ஒலிப்பதோடு ஏக்கம், கோபம், தாபம், காதல், தனிமை, கேள்வி, இழப்பு, நம்பிக்கை, எதிர்ப்பு என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல உணர்வுச் சந்தங்களின் வெளிப்பாடாகவும் அமைகின்றது.

மொத்தத்தில் முழுத்தொகுப்புமே ஏதோவொரு வகையில் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்ட ஒரு பெண்ணின், அதிலும் குறிப்பாக இலங்கையின் கிழக்கைச் சார்ந்த முஸ்லிம் தமிழ்ப்பெண்ணின் 'உயிரைச் சுட்டுக்கொண்டு' மேற்கிளம்புகிற எழுச்சியின் 'பாடல்' ஆகும்.

ஆமாம் !

'முளைத்தெழும்ப விடாமல்
பிறையை
எவரால்
சிறை வைக்க முடியும்?'

- ஆழியாள் -

Canberra
Australia
aazhiyaal@hotmail.com
August 01, 2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- திரு. அல் - அஸுமத்
- திரு. எம். பௌசர்
- திரு. சிதம்பரப்பிள்ளை சிவக்குமார்
- திரு. இளையதம்பி தயானந்தா
- முகம்மது அஸீம்
- ஆழியாள்
- ஏஎம் றஸ்மி
- குடும்பத்தினர்
- நண்பர்கள்

*அனைவருக்கும் ,*

*என் இதயபூர்வமான நன்றிகள் !!!*

⌘

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேய் பிறை

வனாந்தரத்து
விருட்சமொன்றில் குந்தி
வீரிட்டுப் பாடும்
தனித்த பறவையின்
பாட்டினில் கசியும் என் உணர்வு

வேர்களில் எடுத்த வலி
வண்டுகளோடு குலாவும்
பூக்களுக்குப் புரிவதில்லை

அமைதியைப் பிளக்கும்
வன்மப் போரிரைச்சலுள்
மனச்சிறகுதிரும்
வானப் பாலைவனத்தில்
எனது நிலா மட்டும்
தீக் குளித்துச் சாகும்

பரிவும் சுகந்தமும் கமழ்ந்த
அந்திப் பசும் பொழுதுகள்
தொலைந்தன தான்

வண்ணத்துப் பூச்சி
வர்ணங்களாலும்
அணில் குஞ்சுக் கோடுகளாலும்
குழைத்து வரைந்த
நம் நிகரற்றதோர் ஓவியமும்
கிழிந்தது தான்

பிரிவின்
நீண்ட பிரயாணத்தில்
விபத்துக்களையும் பொருட்படுத்தாமற்
தேடுகிறேன்
பௌர்ணமியில் வருடிய விரல்களை
வைகறையில் கொஞ்சிய இதழ்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுச் சாமங்களில்
பனி பெய்து
நிலாக் கரைய
துயரக் கிளைகளில்
அமர்ந்தென் ஜீவனும் விசும்பும்

உறைந்து கன்றிப்போய்
வெப்பிசாரம் வெடிக்க
காத்திருக்கும் உள்ளம்
ஊதிக் கனக்கும்

காயங்கள் சிதறிக் கிடக்க
கண்ணீர் சிந்தும்
கடைசி கானத்தை
ரசந்தட்டி உறுஞ்சியபடி
இரவின் வாய் மூடும்

பௌர்ணமியைத்
தொலைத்து விட்டு
ஒற்றைச் சிறகும் தேய
நீந்தித் தேடுமொரு
தேய் பிறை நான்

❍ 1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியனைப் பற்றவைக்க

நிச்சமாய்
எனது சந்தோசங்கள்
உன்னைக் காயப்படுத்தும்
என்று தான்
கண்ணீர்க் கூட்டுக்குள்
ஒரு துயரமாகவே
என்னை வாழவிட்டாய்

வலிமை மிகு நம்பிக்கைகள்
உதிர்ந்து போகும்படி
தோல்வியை நோக்கியே
துரத்துகிறாய்

மேலும்
உனக்குப் பொழுது போக்கவும்
எனக்குப் போராட்டமாகவும்
போய்விட்டது
( என் ) வாழ்க்கை

நீ கனவு காண்பதற்காக
என் கண்களைப் பறித்தாய்
நீ உலாவி மகிழ்வதற்காக
என் கால்களைத் தடுத்தாய்

தாழ்மையை
பற்றுதலை
உன் திமிர் பிடித்த அதிகாரங்கள்
தாட்சண்யமின்றி
தண்டித்தன

அன்பும் இரக்கமும்
வசீகரமும் பொருந்திய
என் இறகுகளைப் பிடுங்கிப் பிடுங்கி
உன் கறைபடிந்த பற்களை
( இன்னும் )
எத்தனை காலத்திற்கு
தேய்த்துக் கொண்டிருப்பாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிச்சயமாய்
எத்தனை தீப்பந்தங்களை
எறிந்தாலும்
சூரியனைப் பற்றவைக்க
உன்னால் முடியாது

○ 2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓவியம்

ஒவ்வொரு
வர்ணமாய்ப் பிரித்து
தரையில்
கரைத்து சிந்தும்
ஓவியம் இது

இதன் இதயத்திலரும்பிய
கவிதைகளும்
பாவப்பட்டவைதான்

வெறும் ஓவியத்தின்
வாழ்வில்
என்ன அர்த்தமிருக்கமுடியும்
அசைய முடியாக் கைளும்
நகர முடியாக் கால்களும்
பேச முடியா உதடுகளும்

சந்தேகமே இல்லை
வாயில்லா ஜீவன்
ஆடாதசையாது
சுவரில் மாட்டப்பட்டிருக்கிறது
பல்லிகள்
எச்சில் படுத்துவதையும்
எதிர்க்காமல்

வருகிறவர்களுக்கென்ன
வரைந்தவனை
வாழ்த்திவிட்டுப் போகிறார்கள்

சட்டங்களால்
சிலுவையறையப்பட்டிருக்கும்
ஓவியத்தைப் பார்த்து
உண்மை தெரியாதவர்கள்
உயிரோவியம்
என்றார்கள்

❍ 2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரம் சொட்டும் காதல்

மெதுவாய் வீசு
கழன்றுதிர்ந்திடும் உயிர்

மாணிக்கம் சுடருமிரு
கண்களால்
எனை கரைத்து வரையாதே

வார்த்தைகள் கூசுமென்று
பார்வைகளால் பேசி
பைத்தியமாக்கினாய்

போதும்
ஜன்னல்களை மூடு
கம்பிகளின்
காவல் தாண்டி வந்து
உன் கண்கள் நடத்தும்
கலவரங்களில்
உயிரெல்லாம் காயம்

எதிரே வந்து
தலை துவட்டுகிறாய்
தூறல்களில் நனைகிறேன் நான்

கை அசைத்தபடி
அன்றாடம் நீ
அலுவலகம் செல்ல
கதவிடுக்கில் நசுங்கி
மாய்கிறது ஜீவன்

இரவு படரும்
உலர்த்திய
உன் துணிகளை மட்டும்
எடுத்தபடி நீ
உறங்கச் செல்கிறாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதோ
கொடியில் காயப் போட்ட
காதல்
இன்னமும்
ஈரஞ் சொட்டச் சொட்ட

❍ 2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்டுண்ணி

இந்த
மெல்லிய ஆடையின்
அழகுக்குள்
ஊடாடும்
காதல் பாவுகள் நீ

யார் நம்புவார்கள்
இந்த அணிலைக்
கொத்திப் பார்த்தது
அந்தப் பழம் தான் என்பதை

குளத்துக்குள் தெரிவதையே
சகிக்காமல்
கல்லெறிந்து
கலக்கி விட்டுப் போவதனால்
வானிலிருக்கும் நிலாவுக்கு
வருத்தமேதும் இல்லை

கோழியே
நீ கிளறிக்
கொண்டிருக்க
வேண்டும் என்று தான்
என் மனசையே
குப்பையாக்கி
குவித்து வைத்திருக்கிறேன்

உன் கூரைக்கு
வேயப்படட்டுமே
என்று தான்
என் இறகுகளை
உன் எல்லைக்குள்
உதிர்த்துப் போட்டிருக்கிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் புகைப்பட
உருவத்தின் மீது
காயப்படுத்தாத
கண்ணாடியாக இருக்கிறேன்
நீதான்
கண்டு கொள்வதே இல்லை

இந்தப் பெரிய சமுத்திரத்தில்
ஓடமாக இல்லாமல்
அலைகளாகவே இருக்க
ஆசைப்பட்டது ஏன் தெரியுமா
அவ்வப்போது
கரைக்கு வருகிற
உன் கால்களை
அர்ச்சிக்கலாமே என்ற
ஆவல் தான்

யவ்வனப் பத்தியிலே
உன் திறமைகளால் உரசி
சுடர் ஏற்றி வைத்துப்
போய் விட்டாய்
என் உயிர்த்திரி
உணர்வு நெய்வற்றி
தூர்ந்துவிட முன் வந்து
தூண்டி விடு
அல்லது
அணைத்து விட்டுப்போ

❍ 1997


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயமே மருந்தாகி

அந்தந்த வயதில்
அவரவர்கள் பொதிகளை
சுமக்கும் கழுதைகளாக
நாமிருந்தோம்

காலப் போக்கில்
பொதி மூட்டைகளாகிக்
கூடவே
சவாரி செய்யவும்
ஏறியமர்ந்தார்கள்

அவர்கள் போட்ட பாதையில்
அவர்கள் நோக்கிய
திசையில்
அவர்கள் சுட்டுவிரல்
காட்டும் இலக்கில்
எம்மை
இழுத்துப் போனார்கள்

எப்போதும்
அப்படியே
இருக்கமாட்டோமா என்றுதான்
ஏக்கம் அவர்களுக்கு

இப்புதிய கழுதைகளுக்கு
இது காலம் தந்த
பாடம் அல்ல
காயம் தந்த ஞானம்

O 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனச் சிலுவைகள்

எம்மை வாழ்த்துவதற்கு
எவரிடமும் இல்லை
ஒரு வார்த்தை

எனதன்ப
துன்பத்திற்காயும் மனத்தினை
நீ நிழலாய் மூடு

மீளவும்
சோர்ந்த நினைவுகளின்
கரம் பிணைத்து
தூரத்தில் துடிக்கும் தாரகைகளை
ஆழ்ந்து ரசிக்க வேண்டும் உன்னுடன்

நம் நிரந்தரமற்ற ஆசையின்
கடைசி வார்த்தைகளை
உயிர்ப் புல்லாங்குழலில்
நிரப்பிக் கொள்வோம்

நம் உணர்வுகளுக்கின்று
ஓசைகள் இல்லை
கண்களுமில்லை

முடிவின் மிக ஆழத்தில்
மௌனச் சிலுவைகளில்
எம் இதயத்தின் துடிப்புகளும்
அடங்கிப் போகட்டும்

O 2001


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துஷ்பிரயோகம்

எனது குரலை நெரித்துவிட்டு
எனக்காக நீயே பேசி வந்தாய்

எனது பசியை மறுத்துவிட்டு
நீயே புசித்துத் திரிந்தாய்

கஷ்டங்களை நான் சுமக்க
சுகங்களை நீ பெருக்கினாய்

அதற்காகவே
உனது வதை ஆலையில்
என் வாழ்க்கை
சக்கை பிழியப்பட்டு வருகிறது

என் இனிய வரலாற்றை
ஓலங்களைக் கொண்டு
கண்ணீரைக் கொண்டு
எழுதுவித்தாய்

ஆம்
அடக்கத்தை எனக்கே போதித்தாய்
என்னிடமே எதிர்பார்த்தாய்

உயிருள்ள தோளில்
ஓர் மாலையாகக்
கிடக்க நினைத்தேன்
கடைசியில் என்னை
பிணத்தின் கால்களில்
மலர் வளையமாய்ச் சார்த்திவிட்டாய்

❍ 2001



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசாதிருப்பதனால்

நான் பேசாதிருப்பதனால்
ஊமையென்றோ
உணர்ச்சிகளற்றவள் என்றோ
எண்ணிவிட வேண்டாம்

உங்களைத் திருப்திபடுத்தும்
பொய்களைப் பேச
நான் விரும்பவில்லை

நான் அமைதியாக இருப்பதனால்
உங்கள் வாக்குறுதிகளை
நம்பிவிட்டதாக
முடிவுகளுக்கு
தலை சாய்த்து விட்டதாக
கருதிவிட வேண்டாம்

இலாபத்தைப் பார்க்கும் உங்களுக்கும்
நியாயத்தைப் பார்க்கும் எனக்கும்
ஒரு போதும் ஒத்துவராது

உங்கள் தீர்மானங்கள் வேறு
என் தேவைகள் வேறு

உள்ளதையெல்லாம்
விலை பேசுவது
விற்றுச் சம்பாதிப்பது
சந்தை வியாபாரிகளின்
தொழில்

என்னை விட்டு விடுங்கள்

வாழ்வை
உரிமையை
எந்த விலைக்கும்
என்னால் விற்க முடியாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசத்தைக் கக்கிய படியே
பார்வைக்கு அழகாய் நெளியும்
பாம்புகள் நீங்கள்

முட்களோடு தான் என்றாலும்
ரோஜாவாக
ஜீவிப்பவள் நான்

❍ 2000

பொது நூலகம்.
மாநகர சபை – கல்முனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாருக்கும் கேட்பதேயில்லை

நிறுத்தாத
சாட்டையின் விசையும்
ஓவியங்களின் பாடலும்
கேட்டபடியே தான் இருக்கின்றன

கடும் பாறைகளில் மோதி
ஓய்ந்து விடுகின்றது
ஆக்கிரமிப்பிலிருந்து
தப்பிச் செல்ல விரையும் அலைகள்

வாழ்க்கையின் நிழல் வரை
துயிலற்ற இருப்பின்
பிண நெடி

மீட்சி பெறமுடியாக்
காரிருளில்
இருண்ட சேற்றுப் பாதையைச்
சமீபிக்கின்ற
அதிசயம் மிகு ஒளிச்சாரல்
இரட்சிக்குமென்ற ஆவலில் தான்
நால் திசைகளும்
திரும்பி மண்டியிட்டிருக்கின்றன

இருந்த போதிலும்
யாருக்கும் கேட்பதேயில்லை
துளைகள் அடைபட்ட
புல்லாங் குழலினுள்
செத்துக் கொண்டிருக்கிற
கீதம்

○ 2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்மப்படுதல்

சுற்றி வளைந்து
வேலிகட்டி
அதற்குள் என்னைச்
சுவாசிக்கச் சொல்வது தான்
நீ காட்டும் சுதந்திரம்

விரிந்தெழுகிற
என் தேடல்களைப் பரிசோதிக்க
உன் கையில் அதிகாரம்

அதனால் தான்
நினைத்தபடி
நீ சத்திர சிகிச்சை செய்ய
என் வாழ்க்கை
விபத்திலடிபட்ட பிராணியாகிவிட்டது

சுயத்தையெல்லாம்
ஒப்படைத்து விட்டு
வைக்கோல் பொம்மையாகி
உன் இழுப்புக்கு
ஆட வேண்டுமென்றே
நீ நினைக்கிறாய்

நீ சொல்வது தான் வேதம்
நீ காட்டுவது தான் உலகமெனில்
எனக்கென்று
இதயமும் கண்களும் எதற்கு

முன்னேற்பாட்டுடன் நடத்தும்
தாக்குதலைப் போன்று
திடீர் திடீரென என்னைச்
சுற்றி வளைக்கிறாய்
( எதிலும் முன்னேற விடாமல் )

நீ வஞ்சித்தவர்களை
மறந்து துரோகி என்கிறாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ குற்றவாளியாக இருந்து கொண்டு
என்னைத் தண்டிக்கிறாய்

நீ ஏவிய சூறாவளி
வெற்றிகரமாய் வீசி வீசி
என் தேசத்தையே
நாசப்படுத்தலாம்

உலகில்
ஒரே கால நிலை
ஒரே அதிகாரம்
நிலைத்திருப்பதில்லை என்பதை
நீ மறந்து விட்டாய்

❍ 1999

R16536



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாமரைக் குளத்துக் காதலி

உன் உள்ளங்கைக்குள் பொத்தும்
தாமரைப் பூவின் அளவுதான்
என் இதயம்

குளிரில் கொடுகும்
சிறு அணிற்பிள்ளை ஜீவன்

'சூ' என விரகப்பட்டு(ம்)
நெல்மணி களவாடி
உனக்கு ஊட்ட
வரப்பில் வட்டமடிக்கும்
சிட்டுக்குருவி நேசகி

உப்பு மூட்டை பிள்ளையென
உன் முதுகுச் சவாரிக்கேங்கும்
கனவுகளுக்குச் சொந்தக்காரி

கொச்சிக்காய் கடித்த உதடுகளாக
வாழ்க்கை எரிகையிலும்
உனக்காக பொறுத்திருக்கும்
தனிமை எனது

தோளுரசிப் போகவும்
இறுக்கமாய் விரல் கோர்த்து
கரைகளை மிதிக்கவுமாய் ஆசை

மின்மினி வெளிச்சத்தில்
விருந்து வைக்க
தூங்காமல் விழித்திருக்கும்
தூக்கணாங் குருவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் தான்
உன் தூண்டிலில் மாட்டிய
மான் குட்டி
நான் தான்
நீ மயங்கி மூழ்கிய
உன் தாமரைக் குளத்துக் காதலி

❍ 1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேகமும் வானமும்

இந்த
திரைச் சேலை
ஜன்னலோடு உரசினாலும்
நேசிப்பதென்னவோ
எதிர் வீட்டு
ரோஜாவைத் தான்

தண்ணீரைத்
தழுவுவதால்
நிலா
வானுக்குச் சொந்தமில்லாமல்
போகுமா

ஒரு
பூவினால் துரத்தப்பட்ட
வண்டினது
தவிப்பும்
தலை குனிவும்
யாருக்கும் புரியாது தான்

முளைத்தெழும்ப விடாமல்
பிறையை
எவரால்
சிறை வைக்க முடியும்

நீ துடைத்து விட
தூசியல்லவே
உன்னில்
ஒட்டியிருக்கும்
மச்சம் நான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ
ஏழு வர்ணங்களாய்
சேர்ந்த போது
நான் வானவில்லாகினேன்
வித விதமான தளைகளால்
நீ
வேலியான போது
இறுக்கிப் பிடிக்கும்
நிலமாகினேன்

திரும்பியும் பாராமல்
நீ ஓடிவிட்ட பிறகும்
உன் பாதங்களை ஒட்டிய
நிழலாகவே இருக்கிறேன்

மேகமே
நீ எந்தப்பக்கம் ஒழித்தாலும்
வானத்தை விட்டு
விலக முடியாது

(என்) கண்களை விட்டும்
கனதூரம் போய்விட்டதாக
களிப்படைகிறாயா
கண்ணாடியில் பார்
உன் முகத்திலேயே
அழகிய புருவமாய்
அமர்ந்திருக்கிறேன்

❍ 1997



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ம(ர)ணப் பந்தல்

அலங்கரிப்பதற்கு முன்பு
துண்டு துண்டாய்
கிடக்குமென்னைப்
பொறுக்கிப் பொருத்து

வெறியெடுத்த வேளையிலெல்லாம்
வாலில்லாத ஓநாய்கள்
குதறியிருக்கின்றன
எதையாவது பூசி
என் காயங்களாற்று

கைகளில் காய்த்துப்போய்
இன்னும் களற்றப்படாதிருக்கும்
இரும்பு வளையத்தை முதலில்
உடைத்தெறி
கண்ணாடி வளையல்களை
அப்புறம் அணியலாம்

"என்ன பிடிக்கும்"
என்றெல்லாம்
அபிப்பிராயம் கேட்டு
மேலும் எனை நொறுக்காதே

பிடித்தமானவையெல்லாம்
மறுக்கப்பட்டும்
பறி கொடுத்தும்
பழகியவள் நான்

இரகசியங்களின்
தடயங்கள் தெரியாமல்
என் நிர்வாணத்தை மறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைக்குப் பூச்சூட்ட முன்
இதுவரை
சுமத்தப்பட்ட முள்முடிகளை
குப்பைக் கூடைகளை
இறக்க உதவி செய்

கண்ணுக்கு மையிடுகிறாயா

சற்றுப் பொறு
அதை நிறுத்து
ஏனெனில்
எல்லா நேரங்களிலும்
க(பெ)ண்
கண்ணீர்விடவேண்டிய வஸ்த்து

தள்ளிவை
நினைவுகளில் விழுந்த அடி
கடும் சிவப்பேறியிருக்க
விரல்களில் மருதாணி
அவசியமற்றது

உணர்ச்சிகள் ஆர்ப்பரித்து
மீறி வழிந்து விடாது
இதயத்தை
மிதித்துப் பிடிப்பதற்காகத்தானே
உயர்ந்த குதிச் செருப்புகளையும்
பூட்டிவிட்டாய்

ஆகட்டும்
இனி அழைத்துச்செல்
அந்த
ம(ர)ணப்பந்தலுக்கு

❍ 2002


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓவியம் வரையாத தூரிகை

புதிய கனவுகளும்
புத்தாடைகளும்
அலங்காரமாய்ப் புறப்படும்
ஊர் கோலத்தின் மத்தியில்

கிழிந்த ஆசைகளையும்
கீறல் விழுந்த
காயங்களையும் சுமந்து
நானும் திரிவேன்

பிரிவு நொறுக்கிப் போட்ட
இதயத்தை
தனிமை பொறுக்கித்தின்னும்
மௌன முகாரியுள்
தோல்வியின் பாடலது
கரைந்துருகும்

அது விதியை பழி வாங்க
நடந்த விபத்து

நிழல்கள் கறையென்று
வெளிச்சம்
வழக்குரைக்க
வாழ்க்கை வளையும் இன்னும்

சுகமெல்லாவற்றையும்
துன்பம்
பறித்து தின்ற பின்
கொறித்துப் பார்க்கக் கூட
ஒரு சந்தோசமில்லாத
வாழ்வாகிற்று

நான் ஒரு
ஓவியம் வரையாத தூரிகை

பொது நூலகம். யாழ்ப்பாணம் - கரவெட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகுழிக்குள் போட்டு
எனக்கான பரவசங்களை
மூடிவிட்டனர்

பொறுமையின்
பெருஞ் சுவர்களும்
இடித்து நொறுக்கப்பட்ட பிறகு
எதைக் கட்டுவது
இதயத்தின் மீது

காய்ந்து வீழ்ந்த
என் மனச் செடியில்
மலர்களை எதிர்பாராதீர்கள்

கூச்சலிட முடியாமல்
அடித்துக் கதறவும் விடாமல்
என் ஜீவன்
ஊமையாக்கப்பட்டிருக்கிறது

சாபங்கள்
என் பூமியில் கொட்டும் மழை
சோகங்கள்
என் வானில் பரவும் வெயில்

❍ 1999


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வஞ்சனை

எம்மிடமிருந்து
கவர்ந்து சென்று
வாழ்வையும் இன்பத்தையும்
உமது
வளர்ப்பு பிராணிகளுக்கு
ஆபரணமாய் அணிவித்தீர்

எஞ்சியவற்றை
உமது நாற்காலி
அசையாதிருக்க
முட்டுக் கொடுத்தீர்

எம்மிடமிருந்த
எல்லாமே உமக்கு
இடைஞ்சலாய் தோன்றிற்று
எம் உயிரும் உணர்ச்சியும்
உடைமையும் கூட

விதைகளையும்
வேர்களையும்
பூவையும் பிஞ்சையும்
அவ்வப் போது
அழித்துப் புசிப்பதே
உமது சேவையாகிற்று

உமது பாதரட்சைத் தோலுக்கு
எம்
முதுகுத் தோல்
தேவைப்பட்டது

உமது கொடியைப் பறக்க விட
எம் எலும்புகள்
முறிக்கப்பட்டன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்பிலடித்து அழும்
எம் தாய்மார் வயிற்று
நெருப்பெடுத்து
நீவிர் உணவுண்ணுஞ்
சமையல் அடுப்புக்கு
அன்றாடம் பயன் படுத்தினீர்

கடைசியில்
நீர் இத்தேசத்தின்
சௌபாக்கிய மனிதராய் இருக்க
நாம்
நாடற்று
நாதியற்று

○ 1999


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலையுதிர்க்கும் பாட்டு

உயிரைச் சுட்டுக்கொண்டு
எழுகிறது பாடல்
ஊமையின் புல்லாங்குழலினுள்
ததும்பிச் சிந்துகிற
துயரின் முழு கீதம்

காதலின் மனோகரம் கரைந்து
நினைவு வேர்களை
வருடிக் குழையும் நதியின் பேச்சு

செவிகளுள் புகுந்து
இதயத்திடம் மன்றாடும்

நெஞ்சின் நேராக
வணக்கஸ்த்தலத்தின் வழியாக

பத்திப் பதறி
கண்ணீர் பூசிக் கொண்டு
மிதக்குமோர் கானம்

அது காயத்தின் கீதாஞ்சலி

கனவின் அந்தரங்கத்தில்
அவிழும் ஆசை மீட்டல்

விட்டில் வாசிக்கிற வீணை

திசைகளைச் சுருட்டி எடுத்து
காற்றை ஈரலிப்பாக்கி
கலங்குமோர் சங்கீதம்

என் சோலைப் பூமரத்தின்
இலையுதிர்க்கும் பாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் நிறங்களையும்
நிராசைகளையும்
உதிர்த்துதிர்த்து
என் உயிரைச் சுட்டுக்கொண்டு
எழுகிறது பாடல்

○ 2001


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறிய தடங்கள்

உன்னைச்
சிலிர்க்க வைப்பதற்காக
இந்தக் கனவு
காத்துக் கிடக்கிறது
நீ
உறங்க மறுக்கிறாய்

உன் வறட்சியைப்
போக்கத் தான்
ஈர நதி ஊறியது
பாலைவனமே நீ
உறுஞ்ச மறுக்கிறாய்

பூவுக்கு நோகுமென்று
நீ
ஏன் கூந்தலை
அறுத்துக் கொண்டாய்

தோணியின் பாரத்தை
சுமக்க முடியாமல்
அலைகள் அழிந்து போனதை
பார்த்திருக்கிறாயா

எழுத்துக்கள்
சுமை என்று
தாள்கள் ஒரு போதும்
போராட்டம் நடத்துவதில்லை
நெஞ்சுக்குள்
ஒழிந்திருக்கும் வார்த்தைகள்
எப்படி பாரமாக முடியும்

நதி வந்து கலப்பதனால்
கடலுக்கு
எந்தக் கஸ்டமும் வருவதில்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களே
உன்னைத் தாங்குவதில்
இமைகளுக்கு
சுமையல்ல
சுகம் தான்
இதயத்துக்கு
உன் ஞாபகங்கள்
காயங்களல்ல
சின்னங்கள் தான்

இந்தக் காம்பினது
கவலையைப் புரியாமல்
பூவே நீயேன் புலம்புகிறாய்

மாலைகளை அறுத்தெறிந்து
விலங்குகளைப்
பூட்டிக் கொள்கிறாய்
நீ
நீரை நிராகரித்து
புழுதியை
குடிக்க நினைக்கிறாய்

இருட்டில் நின்று கொண்டு
வெளிச்சத்தை
விமர்சிக்காதே
கவனி
" மேற்கில் தெரிவதெல்லாம்
அஸ்தமனங்கள்
கிழக்கில் எப்போதுமே
உதயம் தான் "

○ 1997


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிசு வதை

உடலை வளர்த்தாய்
மனதை வளரவிடாமல்

சொல்லித் தந்தாய்
கேள்வி கேட்க முடியாமல்

வயதுக்கு வயது அறிவூட்டினாய்
செயற்பட வழியில்லாமல்

உயிரைத் தந்து
உணர்ச்சிகளைப் பறித்தாய்

பயத்தை கற்பித்து
பாடத்தை மூடிவிட்டாய்

சாட்சிகள் எத்தனை
சரியாய் இருப்பினும்
மன்னிப்பையன்றி
மரண தண்டனை தான் விதிக்கிறாய்

எனை ஒத்தவர்கள்
குளிரோடையில் படகு விட்டுக்
குதூகலிக்கிறார்கள்

அனலோடைக்குள்ளகப்பட்ட
என் ஓடத்துக்கு
துடுப்பாவது நீ தரவில்லை

வாரிசுகளை வரவேற்க்க
அவர்கள் கைகளில்
பூங்கொத்துகள்
உன் கரத்தில் மட்டும் ஆயுதம்

❍ 1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊமைக் காவியம்

மௌன மயானத்தில்
உணர்வு புதைக்கப்பட்ட நேரம்
தோல்வி
தோள் குலுக்கிக் கொண்டது

யவ்வனம் தளர்ந்து
சுட்ட நீராய்
ஒரு துளி
இமையினைப் பொத்துக்கொண்டு
பூமியைத் தொட்டது

கிழிசலாகிக் கிடக்கிற
ஆத்மாவை
குரூரமாய் தைக்கும்
என் ரத்த பந்தங்களின்
பிடிவாதப் பிடியில்
அவதிப்பட்டும்
சுயநலமாய்
தகனமிடப்பட்ட என்
நெடுங்காலச் சொப்பனத்தின்
உஷ்ணச் சூட்டினால்
உருகி உருகியும்
மனசு உயிர் வாழ்கிறது

என் உலகமே
துயர்களைத் தாங்கிய
பாலைவனம்
வாழத் துடிக்கும் நானோ
விடியலை விழுங்கிய
மலட்டு இரவு போல்
மௌனமாய்
மல்லுக்கட்டுகிறேன்

❍ 1995


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலட்டுச் சித்திரங்கள்

பூக்களேயில்லாத சூன்ய வெளியில்
ஏன் அலைகிறது
இந்த வண்ணத்துப் பூச்சி

நிலவினில் உலர்ந்த கீதங்கள்
பாதியில் அறுந்தன

வஸந்தங்கள் அழிந்து போன
சுவடுகளில்
துளிர் விடுகின்றது கண்ணீர்

தழும்புகளைச் செதுக்கிடும்
உளிகளின் சப்தங்களும்
கரு நீல இருளிற் தெறித்து விழுகின்றது

ஆகாயத் தெருவினில்
வெறும் மலட்டுச் சித்திரங்களை
எழுதி எழுதித் தேய்கிறது
ஒரு வெண்ணிறப் பறவை

இரக்கமற்ற திசைகளின் மேல்
தவறாமல் இயற்றப்படுகின்ற
வைகறை ஒவ்வொன்றும்
பூசி வருகிறது

கண்விரிந்த வாழ்வின்
தீய்ந்து கருகும்
அதே ஏக்கங்களை

○ 2001

பொது நூலகம்.
மாநகர சபை - கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயங்கள்

உறுஞ்சி உறுஞ்சிக்
கனவுகளை குடித்தது
இரவுப் பெரும் நுளம்பு

கவலை இரத்தத்தைக்
குடித்த இவ்விரவு சாகும் இனி

காந்தத்தின் உள்ளேறி
உருக்கும் வலிமை மிகு
கண்ணீர் பட்டு
இம் மெல்லிய காற்றும் பிழைக்காது

பரிவிழந்து
சிணுங்கித்திரிகிற
உணர்வுத் தேனீ
சிறு மலர்களிடம் இளைப்பாறிட
உதிர்ந்திடும் மென்மலர்கள்

வர்ணங்களை
அருந்திக் கொண்டிருக்கிற
ஓவியத்தின் மனத் தாகம் என்னுள்

இறகுகளால் நெய்த
உன் பஞ்சுக் கூட்டுக்குள்
இந்த நெருப்பை
வரவேற்காதே

பனித்துளிக் கோலம் போட
சூரியனால் முடியாது

என் காயங்கள்
உன் பசியாற்றாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது
ரணங்களுக்கு
முட்களால் மருந்திடும் உலகு

பூக்களை முத்தமிடும் ஆவலில்
ஜுவாலைகளை
முத்தமிட்டுக் கருகிய
விட்டில் நான்

மெல்லிய ராகங்களை
மீட்டப் போய்
இடி முழக்கங்களுக்குள் மூழ்கிச்
சிதைந்தவள்

வாழ்க்கையின் மருங்குகளில்
பூங்கன்றுகளை நட்டு வளர்த்தேன்
அதன் நறுமணத்தை
நுகர விடாமல்
என் மூச்சை நிறுத்திவிட்டார்கள்

நீ கொத்திப் பறக்க
பழமல்ல
இது தணல்
நீ சூடிக்கொள்ள
பூக்களல்ல
இவை காயங்கள்

○ 1999

பொது நூலகம்
மருதூர் சபை - கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலை செதுக்கிய சிற்பம்

பெருந்துயரின்
ஒவ்வொரு சங்கிலிக்
கண்ணுள்ளும் என்
புன்னகை கிடந்து நசிபடும்

இதோ
ஒரு திரியின்
ஒளிச்சுடர்
இரவின் அடர்ந்த பக்கங்களில்
தன் தீராத முறையீட்டை
மௌனமாய்ப் பதிவு செய்யும்

அக்கரையில் தோன்றிய
கடல் அலைகள்
ஆசைகளை ஏந்திவந்து
இக்கரையில்
கரைத்துவிட்டுப் போகும்

யாருமற்றதோர்
பாழ்வீட்டில் கண்ணீர் இழை எடுத்து
சிறு கன்னிச் சிலந்தி
காதலைக் கூடுகட்டும்

கனவுகள் சுரந்து
உறக்கத்தை மீறி வழிகிற
இரவுகள் என்னுடையவை

நீ
என் கனவுகள் கண்டெடுத்த
கண்கள்

வெவ்வேறு பாதைகளில்
விலகிச் சென்றாலும்
எல்லாப் பாதையின்
எதிரிலும்
நீயேதான் வந்துகொண்டிருக்கிறாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைத் தழுவிக்கிடக்கும்
நிழலை
விபரம் புரியாமல்
விரட்டிக் கொண்டிருக்கிறது
வெயில்

என்றோ
இறந்துபோன ஜீவனை
அடக்கஞ் செய்யாது
இன்னும்
அலங்கரித்துக் கொண்டிருக்கிறது
மனது

❍ 1999


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோரிக்கை

உனது பணிப்பின் பேரில்
நான் பிறக்கவில்லை
என்னை நிர்ப்பந்திக்காதே

உன் மேற்பார்வையின் கீழ்
" வாழ்வை "
கோப்புகளாக்கி
( அலுமாரி லாச்சிக்குள் )
பூட்டி வைக்கவும் முடியாது

நான் அதிசயப் புதிரோ
ரகசியப் புதையலோ அல்ல
ஒழித்துப் புதைத்துவிட்டு
பூதமாய் நீ காவல் காக்க

நீ திகட்டி வீசியெறியும்
மிச்சம் மீதியுமல்ல

எனது குரல்
தனித்துவமானது
என் ஆற்றலும் சிந்தனையும்
உறுதியானவை

திருத்தச் சட்டங்களாலும்
புதிய ஏற்பாடுகளாலும்
வேலிகளை விசாலப்படுத்தாமல்
விலகி நில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை வழிபடவும்
உன்னைப் பின்பற்றவும்
உனக்கே அனைத்தையும்
தாரை வார்க்கவும்
வற்புறுத்தாதே
முழுவதும் உறுஞ்சவிட்டு
வெற்றுக் கோதாகி
குப்பையோடு குப்பையாகும்
பைத்தியக்காரத் தியாகத்தை
நான் வெறுக்கிறேன்

" என்னை " எனக்கே
நீ கற்றுத் தந்தது(ம்) போதும்
நீ என்னைக் கற்றுக்கொள்

நீ நினைத்தபடி
சேர்க்கவும் கழிக்கவும்
செப்பனிடவும்
களிமண் பொம்மையல்ல நான்
மூக்கும் முழியும்
மூளையும் உள்ள பெண்

நீ வைத்திருக்கும்
அளவுப் பாத்திரத்தில்
என்னை ஊற்றி வார்த்துவிட
இனியும் எண்ணாதே
மன்னிக்க
உனது பணிப்பின் பேரில்
நான் பிறக்கவில்லை

❍ 2000


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓவியச் சிலந்திக் கூடு

ஒவ்வொரு நூலையும்
நிறங்களாக்கி
சிரத்தையுடன் கீறிய கூடு

வாழ்வின் துடிப்புகளால்
வசித்தலுக்கான
பிரயத்தனங்களால்
கால நூல் இழுத்து
கனவுச் சிலந்தி
காற்றில் கட்டியது

அது
இரையின் தேடலினால்
வரைந்த பசியின் வலை

கண்ணீர்த் துளியிலிருந்து
பெருத்து விரிந்திட்ட முகம்
மௌனத் துயரினால்
பூசி மெழுகப்பட்ட உதடுகள்

தன் இதயக் கற்பத்தில்
தூரிகையைச் சுமந்தபடி
அபாயத்தை நோக்கி நகர்கிறது
ஓவியச் சிலந்தி

அழிவுக்காகவே இட்ட
அழகுக் கோலமது

ஏளனங்களாய்
வர்ணங்களுக்குள்
கரைந்தோடும்
அதன் வாழ்வின் பிம்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌனச் சுமைக்குள்
ஜீவித வெடிப்புகளுக்கிடையில்
கூடு பின்னிய
ஓவியச் சிலந்தி நானும்

❍ 2000

R16536



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REFERENCE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாருக்கும் கேட்பதேயில்லை.....

நிறுத்தாத சாட்டையின் விசையும்
ஓவியங்களின் பாடலும்
கேட்டபடியேதான் இருக்கின்றன

கடும் பாறைகளில் மோதி
ஓய்ந்து விடுகின்றது
ஆக்கிரமிப்பிலிருந்து
தப்பிச் செல்ல விரையும் அலைகள்

வாழ்க்கையின் நிழல் வரை
துயிலற்ற இருப்பின்
பிண நெடி

மீட்சி பெறமுடியாக் காரிருளில்
இருண்ட சேற்றுப் பாதையைச்
சமீபிக்கின்ற
அதிசயம் மிகு ஒளிச்சாரல்
இரட்சிக்குமென்ற ஆவலில் தான்
நால் திசைகளும்
திரும்பி மண்டியிட்டிருக்கின்றன

இருந்த போதிலும்
யாருக்கும் கேட்பதேயில்லை
துளைகள் அடைபட்ட
புல்லாங்குழலினுள்
செத்துக் கொண்டிருக்கிற கீதம்

மூன்றாவது மனிதன்
வெளியீட்டகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org